# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC 87/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-7 /PW- 7 <br> Name : மங்கை, மருத்துவர் <br> Father's/Husband's Name : <br> Nationality : Indian | Village: <br> Age : <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 04/01/2023**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தமிழ்நாடு சுகாதாரத் துறையில் மருத்துவராக பணிபுரிந்து பணியில் இருந்து விடுவிக்கப்பட்டு தற்போது தனியாக கிளினிக் வைத்துள்ளேன். கடந்த 16/03/2011 ம் தேதி திருப்பனந்தாள் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, அன்றையதினம் இரவு 11.35 மணிக்கு குமரங்குடி மேல தெருவை சேர்ந்த வீரையன் மகன் ரமேஷ் என்பவர் தாமாக சிசிக்சைக்கு வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது, அன்றையதினம் இரவு 09.30 மணியளவில் சோழபுரம் புதுத்தெருவில் தெரியாத நபர்கள் 5 பேர் கத்தியால் தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது, அவரது உடல்நிலை நல்லநிலையில் இருந்தது. இதயதுடிப்பு சீராகவும், இரத்த அழுத்தம் சீராகவும் இருந்தது. அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது இடதுபக்க விலா எலும்பு (scopler region) பகுதியில் சிராய்ப்பு காயம்

காணப்பட்டது. அவரை வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி காயம் மேற்சொன்ன நேரத்தில் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் மேற்சொன்னவாறு காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

ஒரு நபர் வேகமாக சென்று தாமாக கீழே விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**